முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 637**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

27.06.2021, ஞாயிற்றுக்கிழமை

1. தர்மகீர்த்தியே அரங்கா போற்றி
   தரணியை சுத்தி செய்ய வந்த தேசிகா போற்றி
   பெருமைமிக்க உன் சீடர்படை கொண்டு
   பேருலகை ஞானயுகமாக மாற்றவந்த ஞானியே போற்றி
2. போற்றியே சுப்ரமணியர் யானும் இனிதே
   புகலுவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
   ஆசி தனை பிலவ மிதுன திங்களில்
   அருளுவேன் இனிதே அரங்கன் கேட்க
3. கேட்கவே அரங்கன் வழி தர்மலோகம்
   குறையில்லா அமைந்து மாற்றம் பெறும்
   மாட்சிமைபட அரங்கன் சக்தி வழி
   மண்ணுலகம் புதுமை அடையும்
4. அடையவே தொண்டர்படை கூட்டி
   அகிலத்தை ஞான ஆட்சி தருவேன் என்று
   தடையற உயர்சேவை ஆற்றிவரும்
   தவசியே தானுனக்கு யான் சூட்சுமமாய் இணைந்து நிற்க
5. நிற்கவே உன் பலம் உலகறியும்
   நிலமதனில் உன் தர்மம் உலகை வெல்லும்
   அற்புதம்பட நீ கொண்டுள்ள சுத்த சன்மார்க்கம்
   அனைவரும் ஏற்கப்பட்டு அகிலமே ஞான யுகமாற்றம் பெறும்
6. மாற்றம் தரவந்த மாதவசி நீ
   மக்களை காக்க வந்த மகா யோகி நீ
   ஆற்றல் உன்வழி மக்கள் பெறபெற
   அச்சுறுத்தும் நச்சு கிருமி அல்லலையும் வென்று சிறப்பர்
7. சிறப்பான அரங்கன் உன் சூட்சும தீட்சையால்
   சித்தி பெற்று உலகோர் ஞானிகளாகி
   தயவான வாழ்வும் சிறப்பும் நல்ல தலமையும் கொண்டு
   ஞானசித்தர் ஆட்சிக்காலத்தை உருவாக்கி மகிழ்வர்
8. மகிழ்வுர அரங்கனே சிறந்த ஞானி
   மக்களை மீட்கும் ஒரே தவசி
   அகிலத்தார் உணர்ந்து தெளிந்துவர
   அறிவிப்பேன் சடுதி உலகமாற்றம் நிகழும்

ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—